மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிரிமினல், சிவில் வழக்குகள் எந்த எந்தப் பகுதிகளில் அதிகம் வருகின்றன என்று பார்த்தே உயர் நீதிமன்றம் கோர்ட்டுகளை அந்த அந்தப் பகுதியில் திறக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில என்ன நோக்கத்தில் அது ஓரிடம், இது ஓரிடம் என்று அமைத்தார்கள் என்பது தெரியாது. நாம் பொறுப்பேற்றவுடன் இதுபற்றி ஒரு முடிவு எடுத்து உயர்நீதி மன்றத்திற்குச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் பெரிய அதிகாரி ஒருவரை நியமித்து எப்படி எப்படி நீதிமன்றங்களை மாற்றி அமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்கிறார்கள். அவர்களது முடிவு தெரிந்த பிறகு நாம் ஒரு முடிவு செய்யலாம்.

தாலுக்காவுக்கு ஒரு வேலை வாய்ப்பகம்

*** வினா. 86.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தாலுக்காக்கள் தோறும் வேலை தேடித்தரும் நிலையங்கள் (Employment Exchanges) அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தாலுக்காக்கள் அளவில் இல்லாவிட்டாலும் அங்கங்கே பஞ்சாயத்து யூனியன்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய யூனியன் அளவிலாவது ஏற்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலை தேடித்தரும் நிலையங்கள் மாவட்ட அளவில் பணியாற்றி வருகின்றன. ஊராட்சி மன்றங்கள் தங்களுக்குத் தேவையான ஆட்களை இவர்களிடம் கேட்கிறார்கள். இவர்கள் அனுப்பி வருகிறார்கள். வேலை தேடித்தரும் நிலையங்களை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக வேலை வாய்ப்புகளைத் தோற்றுவித்தால் நம் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : வேலை தேடித்தரும் நிலையங்கள் ஒரு வேலைக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். அவர்கள் போய் வேலையை அந்த இடத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு மாதத்தில் அந்த தற்காலிக வேலை முடிவு அடைகிறது. திரும்பவும் இவர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துகொள்கிறார்கள். இதே இடத்தில் மீண்டும் வேலை காலி ஏற்பட்டால் புதியதாக ஆளை எடுக்கிறார்களே தவிர முன்பு வேலை செய்தவர்களை அழைப்பது கிடையாது. தற்காலிகமாக ஒருவர் நியமிக்கப்பட்டால் அவருக்கு நிரந்தர வேலை கிடைக்கிற வரை தற்காலிக வேலை காலி ஏற்படுகிற போதெல்லாம் அவரையே அழைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

1970 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்ல யோசனை. தற்காலிக மாக வேலைக்கு வருகிறவர்களை நிரந்தர வேலையே கிடைக்கக் கூடாது என்றல்ல. நிரந்தர வேலை கிடைக்கும்வரை முன்பு வேலை செய்தவர்களையே நியமிக்க வேண்டுமென்ற யோசனையை பரிசீலிக்கலாம்.

திரு. கே. போஜன் : தற்சமயம் மாவட்ட தலைநகரில்தான் வேலை தேடித்தரும் ஸ்தாபனம் இருக்கிறது. வேலையில்லாதவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அங்கே சென்று பதிவு செய்து வருவது என்பது சிரமமாக இருப்பதனால் ஒவ்வொரு தாலுக்கா அளவிலா வது ஏற்படுத்த யோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த அளவுக்கு செலவை விரிவுபடுத்துவதைவிட வேலை வாய்ப்பை ஏற்படுத்தினல் பிரச்சினை தீரும்.

திரு. ந' வீராசாமி : தாலுக்காதோறும் வேலை தேடித்தரும் அலுவலகம் இப்போது இல்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை தேடித்தரும் அலுவலகம் இருந்தாலும் அதை டெக்னிகல் சைட், அட்மினிஸ்ட்ரேடிவ் சைட் என்று தனியாக வைப்பதற்கு யோசனை இருக்கிறதா? தனியார் கம்பெனிகளில் இன்றையதினம் அவர்களே ஆட்களை நியமித்துக் கொள்கிறார்கள். அப்படியின்றி இந்த அலுவலகம் மூலமாகத்தான் ஆட்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் கம்பெனிகளை கட்டாயப்படுத்த சட்டம் இடம் தராது. இப்போதே வேலை வாய்ப்பு விவரங்கள் தரப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கப் படுகிறார்கள்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இன்றுள்ள விதிமுறைப்படி ஒரு இடத்திற்கு 6 பேர்களை இந்த வேலை தேடித்தரும் அலுவலகம் அனுப்பி வைக்கிறது. சிலருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனல் அந்தப் பெயர்களை அனுப்புவது இல்லை. ஆகவே ஓரிடத்திற்கு அத்தனை பேர்களையும் அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏராளமானபேர் பட்டியலில் இருக்கிற காரணத்தினல் வரிசைக் கிரமமாக அனுப்புகிறோம். எந்தெந்த வேலைக்கு தகுதியானவர்கள் என்பது பதிவு செய்யப் படுகிறது அந்தந்த வேலைக்குத் தகுதியாக வரிசைக் கிரமமாக அனுப்புவதால் முதலில் பதிந்து கொண்டவர்களுக்கு முதலில் வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. அ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத் தில் வேலை தேடித் தரும் நிலையத்திற்குப் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் நிறையப் பேர்கள் பதிவுசெய்வதற்காகச் செல்கிற

நேரத்திலே அவர்களுக்கு காலை முதல் மாலைவரை நேரம் பிடிக்கிற காரணத்தினாலே, மழையாலும், வெயிலினாலும் பாதிக்கப்படு கிறார்கள். எனவே அந்த நிலையத்தின் காம்பவுண்டுக்குள் ஒரு கொட்டகை அமைத்துக் கொடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாகக் கேள்வி கேட்டால் அந்த ஊரிலே கொட்டகை இருக்கிறதா, வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கலாம்.

மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல்

* **வினா 87.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வலையங்குளம் முதல் பாரப்பத்தி வரையில் சுண்ணாம்புக்கல் கிடைப்பது பற்றி தகவல் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அங்கு ஆராய்ந்தறிய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். (வலையங் குளத்திற்கும் பாறைப்பட்டிக்கும் இடையில்) இளையார்ப்பட்டிக்கு அருகில் காணப்படும் சுண்ணாம்புப் பளிங்குகள் பற்றி தொழில் துறையைச் சேர்ந்த மாநிலப் புவியியல் பிரிவு ஏற்கெனவே ஆய்வு நடத்தியுள்ளது. இந்தச் சுண்ணாம்புக்கல் வெள்ளை, வெளிறிய வெள்ளை ஆகிய நிறங்களையுடையதாகவும், இடைப்பட்ட அளவு பொடி செய்யப்பட்டதாகவும் தரம் குன்றியதாகவும் ஆனால் நல்ல தரமான சுண்ணாம்புக் கற்கள் இடையிடையே கலந்ததாகவும் காணப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 30,000 டன் தரமான சுண்ணாம்புக்கல் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் சுண்ணாம்புக் கல் இருப்பதால் விவசாயம் செய்ய முடியாது பாதிக்கப்படுவ தாகச் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் சுண்ணாம்புக் கல்லை விற்றுத்தான் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். அந்தக் கல்லை உபயோகப்படுத்தி ஒரு தொழிற்சாலையை ஏற்பாடு செய்து அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுண்ணாம்புக்கல் மூலமாக எந்த அளவுக்கு ஒரு புதிய தொழிற்சாலையை உருவாக்க முடியும் என்பது பரிசீலித்ததற்குப் பின்னால்தான் சொல்ல முடியும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சுண்ணாம்புக்கல் ஏராளமாகப் பயன்படுத்தப்படுகிற நிலையில் சிமிண்ட் தொழிற்சாலை மேலும் தொடங்கினால் எந்த அளவுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பது சந்தேகத்திற்குரிய நிலையாக இருக்கிறது. காரணம் ப்ரொடக்ஷன் சர்ப்ளஸ் ஆக இருப்பதுதான். என்றாலும் இது பற்றியும் புவியியல் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள்.